நாள் -14.02.2023

**ST.C. No.**782/2022

**ம.சா.1-சண்முகம் , த/பெ.கணபதியப்பன்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 14**th day of February** 2023.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. நான்10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் லாரியினை வாடகைக்கு எடுத்து ஓட்டும் டிரான் ஸ்போர்ட் தொழில் கிருஷ்ணவேணி டிரான் ஸ்போர்ட் என்ற பெயரில் ரெங்கநாதபுரத்தில் செய்து வருகிறேன். மேற்படி தொழிலுக்கு உரிமமோ அல்லது பதிவெண்ணோ எதுவும் கிடையாது. மேற்படி தொழிலை நான் செய்வதற்கு என் பெயிரல் ஆவணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

2. என்னுடைய சொந்த ஊர் காடாம்பாடி, சூலூர் ஆகும். புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 35 லிருந்து 40 வருடங்களாக வசித்து வருகிறேன். எனக்கு வேறு எந்த தொழிலும் கிடையாது. நான் வருமானவரி செலுத்தி வருகிறேன். கடந்த 6 அல்லது 7 வருடங்களாக வருமானவரி செலுத்தி வருகிறேன். என்னுடைய வருட வருமானவாக ரூ.5 லட்சம் என்று கடந்த வருட வருமான வரி கணக்கில் குறிப்பிட்டுள்ளேன்.

3. மேற்படி 5 லட்சம் என்னுடைய டிரான்போர்ட் தொழில் மற்றும் பழைய வாகனங்களை வாங்கி விற்பதில் கிடைத்த வருமானமாக குறிப்பிட்டுள்ளேன். 15 லட்சம் ரூபாய் என்பது என்னை பொருத்தவரை பெரிய தொகை என்றால் சரிதான். 06.03.2021 ம் தேதியன்று என்வசம் ரூ.15 லட்சம் இருந்தது என்பதை காண்பிக்ககூடிய ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ஆவணம் இருந்தது. என்னுடைய வங்கி கணக்கில் அத்தொகை இருந்தது. பெடரல் வங்கி, பட்டணம் கிளையில் உள்ள என்னுடைய வங்கி கணக்கில் இருந்தது.

4. என்னுடைய வங்கி கணக்கு புத்தகத்தினை நீதிமன்றத்தல் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். எதிரி பாலசுப்ரமணியத்தை எனக்கு 15 லிருந்து 20 வருடங்களாக தெரியும். எதிரி ஸ்ரீ அம்மன் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் மில் வைத்துள்ளார். 20 லிருநது 25 வருடங்களாக மில் வைத்துள்ளார். எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார். ம.சா.ஆ.6 பதில் அறிவிப்பில் குறிப்பிடபட்டுள்ள விபரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பதில் அறிவிப்பு குறிப்பிட்டுள்ள விபரங்களை மறுத்து கூறவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் ம.சா.ஆ.9 குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. எனக்கு கரூரை சேர்ந்த ராமசாமி மகன் முருகேசனை, துர்க்கையப்பகவுண்டர் மகன் சக்திவேலையும் தெரியும் என்றால் சரிதான். நான், சக்திவேல், முருகேஷ் ஆகியோர் ஒன்றாக சேர்ந்து சூலூரில் வட்டி தொழில் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் தான் வட்டி தொழில் செய்து வந்தார்கள். நான் அவர்களிடம் கடன் மட்டும் பெறுவேன். மேற்கண்டவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கேிறள என்றாலும் நானும் ஒரு பங்குதாரர் என்றால் சரியல்ல.

7. எதிரி நாங்கள் நடத்தி வந்த பைனான்சில் 2013 ம் வருடம் ரூ.5 லட்சம் கடனாக பெற்றிருந்தார் என்றாலும், அதற்கு ஆதரவாக எதிரி அவருக்கு பாத்தியப்பட்ட பீடம்பள்ளியில் உள்ள புல எண்.336 ல் 1.43 ஏக்கர் மற்றும் 338/4 ல் 19 சென்டை பொருத்து முருகேசன் பெயரில் 09.05.2013 ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதி பதிவு செய்து பெற்றோம் என்றால் சரியல்ல.

8. மேற்படி பொது அதிகார பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2 வதாக சக்திவேல் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். **(பொதுஅதிகார பத்திரத்தில் உள்ள 4 வது பக்கத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. கடன் வாங்கியதற்கு பாதுகாப்பிற்காக அப்பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவர்களுக்கு எழுதி கொடுக்கப்பட்டதாகும்.

9. மேற்படி பொதுஅதிகார பத்திரமானது என்னுடைய பங்குதாரரான முருகேசன் பெயரில் வாங்கப்பட்டது என்றாலும், அதில் நானும் என்னுடைய மற்றொரு பங்குதாரரான சக்திவேலும் சாட்சி கையொப்பங்கள் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பங்குதாரர் அல்ல. சாட்சி கையொப்பம் மட்டும் செய்தேன்.

10. 24.05.2013 ம் தேதியன்று என்னுடைய பங்குதாரர் முருகேசன் எதிரியின் பொதுஅதிகார முகவராக இருந்து மேற்படி சொத்துககளை பொருத்து என்னுடைய மற்றொரு பங்குதாரரான சக்திவேல் பெயருக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அவர்கள் என்னுடைய பங்குதாரர்கள் அல்ல. **(அவ்வொப்பந்த பத்திரத்தில் உள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**11.** அக்கிரைய ஒப்பந்த பத்திரமும் எதிரி 09.05.2013 ம் தேதியன்று பெற்ற கடனிற்கு பொறுப்பிற்காக எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடன்

தொகையை எதிரி திருப்பி கொடுக்காத காரணத்தினால் 27.06.2014 ம் தேதியன்று கிரயத்திற்கான காரணமானது நீட்டிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் இரண்டாவது சாட்சியாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். **(என்னுடைய சாட்சி கையொப்பம் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**12.** பொதுவாக உரிமம் பெறாமல் வட்டி தொழில் செய்பவர்கள் பாதுகாப்பிற்காக மேலே குறிப்பிடபபட்டுள்ள ஆவங்ணகள், கையொப்பம் இட்ட வெற்று காசோலை, கையொப்பம் இட்ட வெற்று கடனுறுதி சீட்டு, கையொப்பம் இட்ட வெற்று முத்திரைதாள்கள் மற்றும் பச்சை தாள்கள் பெற்று வைப்பது வழக்கம் என்றால் அது எனக்கு தெரியாது.

13. எதிரி மேலே குறிப்பிட்ட 09.05.2013 ம் தேதியிட்ட கடனை 25.04.2016 ம் தேதியன்று திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பின்னர் மேற்படி பொது அதிகார பத்திரம் மற்றும் கிரைய ஒப்பந்த பத்திரம் ரத்து செய்யப்பட்டது எ ன்றால் சரிதான். ரத்து பத்திரங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். **(என்னுடைய சாட்சி கையொப்பங்கள் மட்டும் எ.சா.ஆ. 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

14. மேற்படி ஆவங்களில் குறிப்பிடபட்டுள்ள விபரங்களை தெரிந்து தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் பங்குதாரர் அல்ல என்றோ மேலும் சாட்சியாக மட்டுமே சாட்சி கையொப்பம் செய்தேன் என்று குறிப்பிட்டு ம.சா.ஆ.8 மறுப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை. மறுப்பு அறிவிப்பில் என்ன குறிப்பிடபட்டுள்ளதுஎ ன்ற விபரத்தினை நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை.

15. முருகேசன் மற்றும் சக்திவேலுடன் இன்றறவும் எனக்கு நட்புறவு உள்ளது என்றால் சரிதான். எதிரி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் நகலானது முருகேசன் மற்றும் சக்திவேலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் நான் பதில் அறிவிப்பை பார்க்கவில்லை. வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் நகல் அனுப்பியதை பார்க்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. நான், முருகேசன் மற்றும் சக்திவேல் ஆகியோர் சேர்ந்து பதிவு செய்யாமல் வட்டி தொழிலை சூலூரில் செய்து வந்தோம் என்றாலும் தற்போது வழக்கிற்காக நாங்கள் வட்டி தொழில் செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 09.05.2013 ம் தேதியன்று எதிரி வாங்கிய கடனிற்காக மேற்படி ஆவங்களை எழுதி பெற்ற போது தான் எதிரி இவ்வழக்கு காசோலை, வெற்று கடனுறுதி சீட்டு, கையொப்பமிட்ட

வெற்று பச்சை தாள் ஆகியவற்றை பெற்று கொண்டு கடன் கொடுத்தோம் என்றாலும் அக்கடனை 25.04.2016 ம் திருப்பி செலுத்திய பின்னர் மேற்படி ஆவங்களை திருப்பி கேட்டதற்கு நாங்கள் அவ்வாணங்களை கை தவறுதலாக எங்கோ வைத்து விட்டதாகவும், கிடைத்தால் எடுத்து தருவதாக கூறினோம் என்றால் சரியல்ல. ஆவணங்களை மட்டும் தான் எதிரி எழுதி கொடுத்தார் வேறு வெற்று ஆவணங்கள் எதுவும் எதிரி கொடுககவில்லை.

17. மே மாதம் 2020 ல் எதிரி மீண்டும் 4 லட்சத்தை அவசர தேவைக்காக கடனாக பெற்றார் என்றால் சரிதான். இத்தொகைக்கும் 15 லட்சத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அந்த 4 லட்சத்தை எந்ததெந்த தேதிகளில் வட்டியுடன் திருப்பி செலுத்தினார் என்பது குறித்து எதிரி பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த 4 லட்சத்திற்கு மேலும் நான் தொகை கேட்டதால் அதை எதிரி கொடுக்க மறுத்துவிட்டார் என்பதால் 09.05.2013 ம் தேதியன்று பெற்ற காசோலை, கடனுறுதி சீட்டு, கையொப்பமிட்ட வெற்று தாள்களை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

18. எதிரி முருகேசன் மற்றும் சக்திவேலுக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் நான் அவர்களை பதில் அறிவிப்பு அனுப்ப வேண்டாம் என்று கூறிவிட்டு இவ்வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு 06.03.2020 ல் எதிரி 15 லட்சத்தினை என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும் அந்த சமயத்தில் எனக்கு வட்டி தொழிலில் நஷ்டம் ஏற்பட்டிருந்ததால் அவ்வளவு தொகை கொடுக்கும் அளவிற்கு போதிய வசதி இல்லை என்றால் சரியல்ல.

19. நான் டிரான்ஸ்போர்ட் தொழில் செய்யவில்லை என்றாலும் 2013 ல் வட்டி தொழில் தான் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. எதிரி கடனுறுதி சீட்டு மற்றும் வழக்கு காசோலையை என்வசம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது அச்சிடப்பட்ட வெற்று கடனுறுதி சீட்டாக இருந்ததை நிரப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிண்ட் போட்டதில் பேனாவால் நிரப்ப வேண்டும். எதிரியினுடைய முன்னிலையில் நிரப்பபட்டது.

20. ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் சாட்சிகள் மற்றும் எதிரியின் முன்னிலையில் எழுதப்பட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். எதிரியினுடைய முன்னிலையில் நிரப்பபட்டது. ம.சா.ஆ.1 கடனுறுதி சீட்டினை பயன்படுத்தி உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையில் எதிரியினுடைய கையொப்பமானது கருப்பு நிற மையினாலும் உள்ள என்னுடைய பெயர் மற்றும் தொகை, தேதி ஆகியவை நீல நிற மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால்சரிதான்.

21. ம.சா.ஆ.9 ஆனது யாரால் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றோ அல்லது எழுதப்பட்டது என்றோ குறிப்பு இல்ை லஎன்றால் சரிதான். ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.9 ல் சாட்சி கையொப்பம் செய்தவர் ஒரே நபர் என்றால் சரிதான். நான் அனுப்பிய கூடுதல் அறிவிப்பிற்கு எதிரி 13.01.2022 ம் தேதியன்று மறு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் அதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியாது.

22. எதிரி எனக்கு எந்த தொகையும் கொடுகக கடமைபட்டவர் அல்ல என்றாலும் வழக்கு காசோலைக்குரிய வங்கி கணக்கானது 2015 ம் ஆண்டே முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு பொய் வழக்கு என்பதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2023.02.14 18:19:11 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**